நாள் 04.09.2024

அசல் வழக்கு எண் 109/2019

பி சா 1 ஜேக்கப்

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

வாதி எனக்கு உறவினர் என்றால் இல்லை. அவரை எனக்கு தெரியாது. வாதி எங்கள் ஊரை சார்ந்தவர் என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. பிசா.ஆ.1 ஆவணம் நான் எனது மகனுக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் எனறால் சரிதான். நான் எநத் சொத்தை பொறுத்து எனது மகனுக்கு பி.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுததியுள்ளேன் என்று சொல்லமுடியுமா என்றால் எனக்கு ஞாபமில்லை. எனக்கு எழுதபடிக்கதெரியுமா என்றால் தெரியும் நான் ஒய்வு பெற்ற ஆசிரியர் தான் என்னிடம் காண்பிக்கப்படும் பி.சா.ஆ.2 ஆவணம் நான் தாக்கல் செயதுள்ள ஆவணம் என்று சொன்னால் சரிதான். பி.சா.ஆ.2 பட்டாவை பார்த்து அது எந்த சொத்திற்கானது என்று என்னால் சொல்லமுடியுமா என்றால் என்னால் பாத்து சொல்லமுடியாது. நான் தாககல்செய்துள்ள பி.சா.ஆ.2 படடாவில் புலஎண்.139/1 சி, 154/2 ஏ, 167, 168/2, 175/1 ஏ 2, 175/2 ஏ 1, சொல்லப்பட்டுளளது என்று சொன்னால் எனக்கு ஞாபகமில்லை. பட்டாவில் சொல்லப்படடுளள புல எண்கள் தான் பி.சா.ஆ.1 ஆவணமான செட்டில்மெண்ட் ஆவணத்திலும் சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியவில்லை. வாதி என்ன சொத்திற்கு வழககு தாககல செய்துள்ளார்எனறு எனக்கு தெரியுமா எனறால் தெரியும். வாதி புலஎண்.238/1, 238/2, 246/2 ஆகிய புலஎண்களுக்கு வழக்கு தாக்கல்செய்திருக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் பிராது புல எண் இல்லை என்று சொன்னால் சரிதான். அவர்களுடைய சொத்து வேறு இடத்தில உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள

பி.சா.ஆ.1 ஆவணத்திற்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. எங்கள் இடத்தை அவர்கள் ஆக்கிரமிபபு செய்து இருக்கிறார்கள. பி.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சொத்து எனக்கு எப்படி கிடைத்தது என்றால் எனது அப்பா 60 வருடத்திறகு முன்பு வாங்கிய சொத்து ஆகும். எனது அப்பா 60 வருடத்திற்கு முன்பு வாங்கிய சொததின் ஆவணத்தைநான் தாக்கல்செய்திருக்கிறேனா என்றால் எனக்கு தெரியவில்லை. அந்த சொத்தை எனது அப்பா யாரிடம் வாங்கினார் என்ற சொல்லமுடியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. பி.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சொத்து எனது தந்தை கிரையம் பெற்ற சொதது என்று எனது எதிர்வழக்குரையிலோ அல்லது முதல்விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்று சொன்னால் எனக்கு ஞாபகமில்லை. அதை நாங்கள அனுபவித்து கொண்டு தான் இருக்கிறோம். எனது அப்பா கிரையம் வாஙகிய ஆவணம் எங்கு இருக்கிறது என்றால் பிள்ளைகளிடம் இருக்கிறது. பிள்ளைகளுக்கு எழுதி கொடுத்துவிட்டோம். எனது அப்பா பெற்ற கிரையபத்திரத்தின் நகல் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் பிள்ளைகளிடம் அந்த பத்திரம் இருக்கிறதா என்று எனக்கு ஞாபகமில்லை. நான் எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் 10 வது பத்தியில் 1959 முதல் சொத்தை அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். எந்த ஆண்டு எனது அப்பா எனக்கு எழுதிதந்தார் என்றால் எனது அப்பா இறந்துவிட்டார் நான் சொத்தை அனுபவித்தேன எனது பிள்ளைகளுக்கு எழுதிகொடுத்துவிட்டேன். எனனுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் என்னுடன் சேர்ந்து 2 மகன் மற்றும் 2 மகள் ஆகும். எனதுஅப்பா இறந்தபிறகு சொத்து தனிப்பட்ட முறையில் எனக்கு

வராது 4 பேருக்கும் சேர்ந்துதான் வரும என்று சொன்னால் எனது அக்கா பேரும் சொத்தை விரும்பவில்லை. சொத்து என் பேரிலும் எனதுஅண்ணண் பெயரிலும் இருந்தது. இரண்டு பாகமாக பதித்து கொண்டோம். எனது பாகத்தை எனது பிள்ளைகளுக்கு எழுதிகொடுத்தேன். எனது பாகத்தை பிள்ளைகளுக்கு எழுதிகொடுத்தேன் என்று பிசா.ஆ..1 ஆவணத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியிருக்கிறேன். வழக்கு சொத்தும் பி.சா.ஆ.1 ஆவணத்தில உள்ள சொத்தும் வெவ்வேறு சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்துக்களான சர்வே எண்.238/1, 238/2, 246/2 சொத்தை வாதி அனுபவிப்பதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. என்னுடைய சொத்து எனக்கு வேண்டும். 06.08.2019 ல் வாதி தாவா சொத்திற்கு வேலி போட்டார் என்றால் எங்களுடைய இடத்தில் நாங்கள் ஏற்கனவே வேலிபோட்டு இருக்கிறோம். அதனால் வேலி போடக்கூடாது என்று நாங்கள் தடுத்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படக்ஙளில் உள்ள தபசில் சொத்தில் உள்ள வேலி முள்கம்பிகள் உடைந்த நிலையில் உள்ள புகைப்படம் என்றால் சரிதான் அதை நாங்கள் உடைக்கவில்லை.என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படங்களில் வேலி உள்ளதாக துலங்கவில்லை எனறால சரிதான். நாங்கள் வேலி போட்டு இருக்கிறோம். 06.08.2019 ல் திசையன்விளை காவல்நிலையத்தில் எனது மகன் வாதி மீது புகார் கொடுத்ததா நான்சொலலியுள்ளேன் என்றால் சரிதான். அந்த புகார் மனு தாக்கல்செய்திருக்கிறேனா என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. சர்வயேர் மூலம் அளவு செய்து வேலி போட்டு கொள்வதாக சொல்லிவிட்டு வாதி இவ்வழக்கை தாக்கல்செய்துள்ளதாக நான் எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால்

அவ்வாறு இல்லை. சொத்து வாதியின அனுபவத்தில் உள்ள சொத்துஎன்றால் இல்லை. நான் என்னுடைய அனுபவத்தில் உள்ள மற்றொரு சொத்தை காட்டி தவறாக கட்சி செய்கிறேன்என்றால்இல்லை. நா் தாக்கல்செய்துள்ள ஆவணங்கள் முறைப்படியான ஆவணங்கள் இல்லை எனற்ம் அவை மோசடியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வாதியின் மனைவியை நான் தாக்கியதாக வாதியின் மனைவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள் என்றால் விசாரிக்கவில்லை. திசையன்விளை காவல்நிலையத்தில் வாதியின் முள்கம்பிகளை நான் திருடியதாக என்மீது வாதி புகார் கொடுத்து அதனபேரில்என்னனை விசாரணை செய்தார் என்றால் இல்லை. தபசில் சொத்தில் என்ன இருக்கிறது என்றால் பனை மரம்இருக்கறிது. எத்தனை பனை மரம் இருக்கிறது என்றால் 5, 6 மரம் இருக்கும்.எனக்கு ஞாபகமிலலை, பி.சா.ஆ.3 ரசீதுகள் இந்த ஆண்டிற்கான ரசீது என்றால் சரிதான். வழக்கு தாக்கல்செய்யப்பட்டட பின்பு பி.சா.-ஆ.3 ரசீது வாங்கப்பட்டுளளது என்றால் சரிதான். வழக்கிற்கு முந்தைய ரசீதுகள் எங்கு உளளது என்றால் வீட்டில் இருக்கும். வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தும் நான் கட்சிசெய்யும் சொத்தும் வெவ்வேறு சொத்தும் வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றுசொன்னால் சரியல்ல.